**1)** தாயுமானவர் பற்றிய வாக்கியங்களில் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது எது?

A) இவர் பராபரக்கண்ணியை இயற்றியவர் ஆவார்

B) இவர் திருச்சி விஜய ரகுநாத பூபதியிடம் பெருங்கணக்கராகப் பணியாற்றினார்

C) இவருடைய பாடல்கள் தமிழ்மொழியின் உபநிடதம் என்று அழைக்கப்படுகிறது.

D) இவரின் ஊர் திருமறைக்காடு. இவருடைய காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு.

E) விடை தெரியவில்லை

**2)** திருமூலர் பற்றிய வாக்கியங்களில் தவறானது எது?

A) இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர், பதினெண் சித்தர்களுள் ஒருவர்

B) இவரின் பாடல்கள் 10ஆம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன

C) இவரின் காலம் கி.பி. 7 ஆம் நூற்றாண்டு

D) இவர் இயற்றிய திருமந்திரம் மூவாயிரம் பாடல்களை கொண்டமையால், தமிழ் மூவாயிரம் என்று அழைக்கப்படுகிறது.

E) விடை தெரியவில்லை

**3)** நேதாஜி என்ற இதழை வெளியிட்டவர்?

A) மோகன் சிங்

B) லெட்சுமி செகல்

C) முத்துராமலிங்கனார்

D) மா.சு.அண்ணாமலை

E) விடை தெரியவில்லை

**4)** இதில் எது பாரதிதாசனின் சிறப்புப் பெயர் அல்ல?

A) தமிழ்நாட்டு இரசூல் கம்சதேவ்

B) புதுவைக்குயில்

C) இயற்கைக் கவிஞர்

D) புதுமைக் கவிஞர்

E) விடை தெரியவில்லை

**5)** ரமி - என்ற புனைப்பெயர் கொண்டவர்?

A) வாணிதாசன்

B) சி.மணி

C) பாரதிதாசன்

D) ந.பிச்சமூர்த்தி

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**6)** தமிழ் எழுத்தாளர்களின் சிறப்புப் பெயர்களில் பொருந்தியுள்ளது எது?

A) தென்னாட்டு தாகூர் - வாணிதாசன்

B) தமிழ்நாட்டின் பெர்னாட்ஷா - அறிஞர் அண்ணா

C) தற்கால உரைநடையின் தந்தை - ஆறுமுக நாவலர்

D) பாவலர்மணி - கதிரேசன் செட்டியார்

E) விடை தெரியவில்லை

**7)** பொருந்தாதது எது?

A) பாவலரேறு - பெருஞ்சித்திரனார்

B) கவிஞரேறு - வாணிதாசன்

C) புலவரேறு - அ.வரதநஞ்சையர்

D) கலைஞாயிறு - தாராபாரதி

E) விடை தெரியவில்லை

**8)** இயற்பெயர்களில் பொருந்தாதது?

A) பெருஞ்சித்திரனார் - மாணிக்கம்

B) இறையரசன் - சே.சேசுராசா

C) காளமேகப் புலவர் - வரதன்

D) உமறுப்புலவர் - சுல்தான் அப்துல் காதர்

E) விடை தெரியவில்லை

**9)** சிற்பி பாலசுப்பிரமணியனின் சாகித்ய அகாதமி விருது பெற்ற நூல்?

A) ஒரு கிராமத்து நதி

B) ஆலாபனை

C) வேரில் பழுத்த பலா

D) புதிய உரைநடை

E) விடை தெரியவில்லை

**10)** குணங்குடி மஸ்தான் இயற்றாத கண்ணி நூல் யாது?

A) எக்காளக் கண்ணி

B) மனோன்மணிக் கண்ணி

C) பராபரக்கண்ணி

D) நந்தீசுவரக் கண்ணி

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**11)** தி. ஜானகிராமன் பற்றிய பின்வரும் தொடர்களில் தவறானது எது?

A) கரிசல் மண்வாசனையுடன் கதைகளைப் படைத்தவர்.

B) மணிக்கொடி, கிராம ஊழியன், கணையாழி, கலைமகள், சுதேசமித்திரன், ஆனந்த விகடன், கல்கி போன்ற இதழ்களில் இவரின் கதைகள் வெளிவந்துள்ளன.

C) அவரவர் அனுபவிப்பதும் எழுத்தாக வடிப்பதும் அவரவர் முறை என்ற கோட்பாட்டை உடையவர்.

D) நாவல்கள், நாடகங்கள் ஆகியவற்றையும் படைத்துள்ளார். தமிழ்க் கதையுலகம் நவீனமயமானதில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது

E) விடை தெரியவில்லை

**12)** இவர்களுள் சன்மார்க்க கவி என்று அழைக்கப்படுபவர்?

A) காளமேகப்புலவர்

B) அருணகிரிநாதர்

C) இராமலிங்க அடிகளார்

D) மாணிக்கவாசகர்

E) விடை தெரியவில்லை

**13)** எழுத்து இதழ்த் தொகுப்பின் தொகுப்பாசிரியர் யார்?

A) சி.சு.செல்லப்பா

B) சு.சமுத்திரம்

C) கி.அ.சச்சிதானந்தன்

D) தேவதேவன்

E) விடை தெரியவில்லை

**14)** திருவள்ளுவரின் சிறப்புப் பெயர் அல்லாதது?

A) தெய்வப்புலவர்

B) செந்நாப் போதார்

C) தமிழ்முனி

D) நான்முகனார்

E) விடை தெரியவில்லை

**15)** இவற்றுள் பௌத்த காப்பியம் அல்லாதது?

A) மணிமேகலை

B) குண்டலகேசி

C) நீலகேசி

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**16)** காப்பியப்பாட்டு, உளவியல் பாட்டு என்றெல்லாம் அழைக்கப்படும் நூல்?

A) குறிஞ்சிப்பாட்டு

B) அகநானூறு

C) சிலப்பதிகாரம்

D) நெடுநல்வாடை

E) விடை தெரியவில்லை

**17)** பின்வரும் எந்நூல் பெரியபுராணம் என்றழைக்கப்படுகிரது?

A) திருத்தொண்டர் புராணம்

B) திருத்தொண்டத்தொகை

C) திருத்தொண்டர் திருவந்தாதி

D) நாலாயிர திவ்விய பிரபந்தம்

E) விடை தெரியவில்லை

**18)** யாருடைய நூலை "பறவைகள் ஒருவேளை தூங்கப்போயிருக்கலாம்" என்ற தலைப்பில் இந்திற்றன் மொழிபெயர்த்தார்?

A) மனோரமா பிஸ்வாஸ்

B) ஃபக்கிர் மோகன் சேனாபதி

C) கங்காதர் மெகர்

D) கோபால் சந்திர ப்ரஹராஜ்

E) விடை தெரியவில்லை

**19)** குற்றாலக் குறவஞ்சிக்கு வழங்கப்படும் வேறு பெயர் அல்லாதது?

A) குறத்திப்பாட்டு

B) குறம்

C) உழத்திப்பாட்டு

D) குறவஞ்சி நாடகம்

E) விடை தெரியவில்லை

**20)** சரியாகப் பொருந்தியுள்ளது எது?

A) தமிழர் வேதம் - திருமந்திரம்

B) தமிழ் வேதம் - திருவாசகம் மற்றும் நாலாயிர திவ்விய பிரபந்தம்

C) குட்டி திருவாசகம் - திருக்கருவை பதிற்றுப் பத்தந்தாதி

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

**21)** இந்தியா என்னும் இதழை பாரதியார் எவ்வண்ணத்தில் வெளியிட்டார்?

A) நீலம்

B) கருப்பு

C) மஞ்சள்

D) சிவப்பு

E) விடை தெரியவில்லை

**22)** வஞ்சி நெடும் பாட்டு என்று அழைக்கப்படும் பத்துப்பாட்டு நூல்?

A) பட்டினப்பாலை

B) புலவராற்றுப்படை

C) மதுரைக்காஞ்சி

D) பெரும்பாணாற்றுப்படை

E) விடை தெரியவில்லை

**23)** திருவாய்மொழி என்றழைக்கப்படும் நூல்?

A) திருவெம்பாவை

B) நறுந்தொகை

C) திருக்கோவையார்

D) திருவாசகம்

E) விடை தெரியவில்லை

**24)** கிருஸ்துவர்களின் களஞ்சியம் என்றழைக்கப்படும் நூல்?

A) இரட்சண்ய யாத்ரிகம்

B) இயேசு காவியம்

C) தேம்பாவணி

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

**25)** நெஞ்சாற்றுப்படை என்றழைக்கப்படும் நூல்?

A) திருமுருகாற்றுப்படை

B) பெரும்பாணாற்றுப்படை

C) கூத்தராற்றுப்படை

D) முல்லைப்பாட்டு

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**26)** சாகித்திய அகாதமி விருது பெற்ற தி.ஜாவின் சிறுகதைத் தொகுப்பு எது?

A) அன்பளிப்பு

B) சக்தி வைத்தியம்

C) முதலில் இரவு வரும்

D) அப்பாவின் சிநேகிதர்

E) விடை தெரியவில்லை

**27)** சிலப்பதிகாரத்தின் வேறு பெயர் அல்லாதது?

A) தேசிய காப்பியம்

B) முதற்காப்பியம்

C) செந்தமிழ் காப்பியம்

D) தெய்வ காப்பியம்

E) விடை தெரியவில்லை

**28)** அகவல் காப்பியம் என்றும் கொங்குவேள் மாக்கதை என்றும் அழைக்கப்படும் நூல் எது?

A) நாலடியார்

B) பெருங்கதை

C) திருப்பாவை

D) பரிபாடல்

E) விடை தெரியவில்லை

**29)** தி.ஜானகிராமன் தனது ஜப்பான் பயண அனுபவங்களை உதயசூரியன் என்றத் தலைப்பில் எந்த வார இதழில் எழுதினார்?

A) இந்தியா

B) இந்து

C) விஜயா

D) சுதேசமித்திரன்

E) விடை தெரியவில்லை

**30)** கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டுகோல் - என்றவர் யார்?

A) மௌனி

B) தி. ஜானகிராமன்

C) புதுமைப்பித்தன்

D) வ.வே.சு

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**31)** ஆணைச்சக்கரமும், வெண்குடையும், அத்தி மாலையும் அடையாளம் காட்டும் மன்னன்

A) சேரன்

B) சோழன்

C) பாண்டியன்

D) பல்லவன்

E) விடை தெரியவில்லை

**32)** தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும் என்ற கருத்து பின்வரும் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

A) திருமுருகாற்றுப்படை

B) மதுரைக்காஞ்சி

C) திருவள்ளுவமாலை

D) சிறுபாணாற்றுப்படை

E) விடை தெரியவில்லை

**33)** நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐந்தும் கலந்தது இவ்வுலகம் என்ற அறிவியல் உண்மையை குறிப்பிடும் முதல் தமிழ் நூல் எது?

A) தொல்காப்பியம்

B) திருக்குறள்

C) பரிபாடல்

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

**34)** கல்விக் கண் திறந்த காமராசர் என்று மனதாரப் பாராட்டியவர் யார்?

A) ராஜாஜி

B) பெரியார்

C) அண்ணா

D) கலைஞர்

E) விடை தெரியவில்லை

**35)** தஞ்சாவூர் தமிழுக்கு அளித்த கொடைகளில் பொருத்தமில்லாத நபர் யார்?

A) உ. வே.சா B) மௌனி

C) தஞ்சை பிரகாஷ் D) புதுமைப்பித்தன்

E) விடை தெரியவில்லை

**36)** நூலக விதிகளை உருவாக்கியவர் மற்றும் இந்திய நூலக அறிவியலின் தந்தை எனப்படுபவர் யார்?

A) இரா.அரங்கநாதன்

B) ஜேம்ஸ் வில்சன்

C) மகலநோபிஸ்

D) அவிநாசி மகாலிங்கம்

E) விடை தெரியவில்லை

**37)** ஒப்புரவு என்ற சொல்லின் பொருள் என்ன?

A) பிறர் செய்த உதவியை மறவாமை

B) பிறருக்கு உதவி செய்தல்

C) நட்புகொள்ளுதல்

D) நற்பண்பு உடையோர்

E) விடை தெரியவில்லை

**38)** ஆசாரக்கோவையின் ஆசிரியர் யார்?

A) கண்ணன் கூத்தனார்

B) கணிமேதாவியார்

C) பெருவாயின் முள்ளியார்

D) புல்லாங்காடனார்

E) விடை தெரியவில்லை

**39)** திருவள்ளுவர் தினம் என்று கொண்டாடப்படுகிறது?

A) தை முதல் நாள்

B) தை இரண்டாம் நாள்

C) தை மூன்றாம் நாள்

D) தை நான்காம் நாள்

E) விடை தெரியவில்லை

**40)** அறுவடைத் திருநாளானது உத்தராயன் என்ற பெயரில் எங்கு கொண்டாடப்படுகிறது?

A) குஜராத் & ராஜஸ்தான்

B) பஞ்சாப்

C) A & B

D) மகாராஷ்டிரா, ஆந்திரா & கர்நாடகா

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**41)** நாகசுரம் செய்யப்படும் மரம் எது?

A) வேம்பு

B) மா

C) ஆச்சா

D) பலா

E) விடை தெரியவில்லை

**42)** தவறான தொடர் எது?

A) இலைக்கு வேறு பெயர் தழை

B) பூ மணம் வீசும்

C) திருமணத்திற்கு கூறைப் புடவை வாங்கினார்

D) வண்டி இழுப்பது காளை

E) விடை தெரியவில்லை

**43)** காவியப்பாவை என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) தேனரசன்

B) தாராபாரதி

C) மீரா

D) முடியரசன்

E) விடை தெரியவில்லை

**44)** 'நாட்டுப்புற இயல் ஆய்வு' என்னும் நூலைத் தொகுத்தவர் யார்?

A) நா.வானமாமலை

B) இராமநாதன்

C) சு. சக்திவேல்

D) புலவர் செ.ராசு

E) விடை தெரியவில்லை

**45)** 'பாலொடு வந்து கூழொடு பெயரும்' என விளக்கும் நூல்?

A) நற்றிணை

B) குறுந்தொகை

C) அகநானூறு

D) ஐங்குறுநூறு

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**46)** இன்று நாம் எந்த என்னும் எழுத்தைச் சுட்டாகப் பயன்படுத்துவதில்லை?

A) அ

B) இ

C) உ

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

**47)** திருக்குறள் - தேசம் உடுத்திய நூலடை என்று குறிப்பிடுபவர்?

A) தாராபாரதி

B) முடியரசன்

C) பாரதியார்

D) கவிமணி

E) விடை தெரியவில்லை

**48)** "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று காந்தியடிகள் குறிப்பிட்ட நபர்?

A) இராசமாணிக்கனார்

B) வீரமாமுனிவர்

C) உ.வே.சா

D) ஜி.யு.போப்

E) விடை தெரியவில்லை

**49)** மணிமேகலை கையிலிருந்த அமுத சுரபியில் முதன்முதலில் உணவிட்டவள்?

A) காயசண்டிகை

B) தீவதிலகை

C) ஆதிரை

D) சித்திரை

E) விடை தெரியவில்லை

**50)** இவற்றுள் இடுகுறிச் சிறப்புப்பெயர் எது?

A) மரங்கொத்தி

B) களிமண்

C) முக்காலி

D) வளையல்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**51)** எதுவே சிறந்த அறம் என்கிறார் திருவள்ளுவர்?

A) உள்ளத்தில் குற்றம் இல்லாமல் இருப்பது

B) ஏழைகளுக்கு உணவளிப்பது

C) பெரியோரை பிழையாமல் இருப்பது

D) பகிர்ந்து உண்ணுதல்

E) விடை தெரியவில்லை

**52)** அற நூல்களில் கூறப்படும் அறங்கள் எல்லாவற்றையும் விடச் சிறந்தது எது என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

A) நல்லவை கேட்டல்

B) அல்லவை பேசாதிருத்தல்

C) பகிர்ந்து உண்ணுதல்

D) பிறன்மனை நோக்காதிருத்தல்

E) விடை தெரியவில்லை

**53)** ஆங்கில மொழியில் எழுதப்பட்ட 'லைட் ஆ்ஃப் ஆசியா' என்ற நூலைத் தழுவி ஆசியஜோதி என்ற நூலை இயற்றியவர் யார்?

A) பாரதியார் (சென்னிகுளம் அண்ணாமலையார்)

B) பாரதிதாசன்

C) நாமக்கல் கவிஞர்

D) கவிமணி தேசிக விநாயகனார்

E) விடை தெரியவில்லை

**54)** கைலாஷ் சத்யார்த்தி தொடங்கிய இயக்கம்?

A) குழந்தைகளைப் பாதுகாப்போம்

B) குழந்தைக் கல்வியை பாதுகாப்போம்

C) குழந்தைத் தொழிலாளர்களைப் பாதுகாப்போம்

D) பெண்குழந்தைகளை பாதுகாப்போம்

E) விடை தெரியவில்லை

**55)** தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் யார்?

A) பாரதிதாசன் B) கண்ணதாசன்

C) சுப்பு ரத்தின தாசன் D) நாமக்கல் கவிஞர்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**56)** பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையேயான வேறுபாட்டை முறையே உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்றவர் யார்?

A) தொல்காப்பியர்
B) பவணந்தி முனிவர்
C) வீரமாமுனிவர்
D) தண்டி
E) விடை தெரியவில்லை

**57)** வெளியுலகில், சிந்தனையில் புதிதுபுதிதாக / விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்கள் எல்லாம் கண்டு / தெளிவுறுத்தும் படங்களொடு சுவடிஎலாம் செய்து / செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்." - என்றவர் யார்?

A) கவிமணி
B) பாவேந்தர்
C) நாமக்கல்லார்
D) பாரதியார்
E) விடை தெரியவில்லை

**58)** சுரதாவால் இயற்றப்படாத நூல்?

A) அமுதும் தேனும்
B) தேன்மழை
C) தமிழச்சியின் கத்தி
D) துறைமுகம்
E) விடை தெரியவில்லை

**59)** சிறந்த தமிழ்க்கவிதைகளைத் தொகுத்து பின்வரும் எத்தலைப்பில் இராஜமார்த்தாண்டன் நூலாக்கியுள்ளார்?

A) வெள்ளைப் பறவை
B) கொங்குதேர் வாழ்க்கை
C) கையொப்பம்
D) ஒரு கிராமத்து நதி
E) விடை தெரியவில்லை

**60)** ஐகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வரும்போது எத்தனை மாத்திரை அளவில் ஒலிக்கும்.

A) அரை மாத்திரை
B) இரண்டு மாத்திரை
C) ஒரு மாத்திரை
D) ஒன்றரை மாத்திரை
E) விடை தெரியவில்லை

**61)** "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்/ குறுகத் தரித்த குறள்" என்று திருக்குறளின் பெருமையைப் போற்றியவர்?

A) ஔவையார்

B) மங்கையர்கரசியார்

C) வெள்ளிவீதியார்

D) காக்கைப்பாடினியார்

E) விடை தெரியவில்லை

**62)** திருக்குறள் அறத்துப்பால் பகுதியில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?

A) 25

B) 70

C) 38

D) 133

E) விடை தெரியவில்லை

**63)** யாண்டுளனோ? என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) யாண்டு + உளனோ

B) யான் + உளனோ

C) யா + உளனோ

D) யாண்டு + உனோ

E) விடை தெரியவில்லை

**64)** வ.உ.சி துவங்கிய சுதேசக் கப்பல் கம்பெனியில் வ.உ.சி வகித்த பதவி என்ன?

A) துணைத் தலைவர்

B) செயலாளர்

C) கடைநிலை ஊழியன்

D) தலைவர்

E) விடை தெரியவில்லை

**65)** சிதம்பரனாரின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர்த்தெழும். புரட்சி ஓங்கும். அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்" என்றவர் யார்?

A) நீதிபதி மாண்டேகு

B) நீதிபதி ஹென்றி

C) நீதிபதி சார்லஸ்

D) நீதிபதி பின்ஹே

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**66)** இரா.பி.சேது அவர்கள் எவ்வாறு போற்றப்படுகிறார்?

A) சொல்லின் செல்வர்

B) சிலம்புச் செல்வர்

C) முத்தமிழ் காவலர்

D) தமிழிசைக் காலவர்

E) விடை தெரியவில்லை

**67)** பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரி?

கூற்று1: வாயில் என்பது இலக்கணமுடையது ஆகும்

கூற்று 2: வாசல் என்பது இலக்கணப்போலி ஆகும்

A) கூற்றுகள் இரண்டும் சரி

B) கூற்று 1 மட்டும் சரி

C) கூற்று 2 மட்டும் சரி

D) இரு கூற்றுகளும் தவறு

E) விடை தெரியவில்லை

**68)** ஒரு தொடரில் யாரை, எதை, எவற்றை என்னும் வினாக்களுக்கு விடையாக வருவது _____ எனப்படும்.

A) பயனிலை

B) செயப்படுபொருள்

C) எழுவாய்

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

**69)** ஞெகிழி என்னும் சொல்லின் பொருள் என்ன?

A) தூண் B) தீச்சுடர் C) கடல் D) ப்ளாஸ்டிக்

E) விடை தெரியவில்லை

**70)** பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன்?

A) கரிகாலன்

B) ஓய்மான் நல்லியக்கோடன்

C) தொண்டைமான் இளந்திரையன்

D) தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**71)** உரவுநீர் அழுவம் - என்ற தொடரில் அழுவம் என்பதன் பொருள்?

A) காற்று

B) வானம்

C) கடல்

D) மலை

E) விடை தெரியவில்லை

**72)** பூம்புகார் துறைமுகத்திலிருந்து கப்பல்கள் மூலம் பொருள்கள் ஏற்றுமதியும் இறக்குமதியும் செய்யப்பட்டன என்பதை விரிவாகக் கூறும் நூல்?

A) மணிமேகலை

B) பரிபாடல்

C) பட்டினப்பாலை

D) சிலப்பதிகாரம்

E) விடை தெரியவில்லை

**73)** “கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஇய்” என்னும் பாடலடி இடம்பெற்ற காப்பியம்?

A) சிலப்பதிகாரம்

B) மணிமேகலை

C) சீவகசிந்தாமணி

D) வளையாபதி

E) விடை தெரியவில்லை

**74)** விஷம் என்பதை விடம் என்றும், லக்ஷ்மி என்பதை இலக்குமி என்றும், வட சொற்களை தமிழ் எழுத்துகளால் மாற்றி எழுதுவதை ............... என்பர்.

A) தற்சமம்

B) தற்பவம்

C) தற்சமயம்

D) தற்பாவம்

E) விடை தெரியவில்லை

**75)** காளமேகப் புலவ்ரின் நூல் அல்லாதது எது?

A) திருவானைக்கா உலா

B) சரசுவதி அந்தாதி

C) சரசுவதி மாலை

D) பரபிரம்ம விளக்கம்

E) விடை தெரியவில்லை

**76)** பின்வரும் எந்தக் காப்பியத்தில் குணமாலை என்னும் தலைவி யானையைக் கண்டு அஞ்சிய காட்சியை அந்தக் காப்பியத்தின் நாயகன் துணியில் வரைந்ததாகக் கூறப்பட்டுள்ளது?

A) குண்டலகேசி

B) வளையாபதி

C) மணிமேகலை

D) சீவக சிந்தாமணி

E) விடை தெரியவில்லை

**77)** தமிழ்நாட்டின் மைய நூலகம் எது?

A) சென்னை கீழ்த்திசை நூலகம்

B) சென்னை உ.வே.சா நூலகம்

C) சென்னை கன்னிமாரா நூலகம்

D) சென்னை அண்ணா நூலகம்

E) விடை தெரியவில்லை

**78)** "தமிழ் படிக்கும் பேறு பெற்றேன்" என்றத் தொடரில் 'பேறு' என்பது?

A) விகுதி பெற்ற தொழிற்பெயர்

B) முதனிலைத் தொழிற்பெயர்

C) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

D) மேற்கண்ட எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

**79)** மூன்றுறை அரையனார் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்?

A) கி.பி. மூன்று

B) கி.பி. நான்கு

C) கி.பி. ஆறு

D) கி.பி. ஒன்பது

E) விடை தெரியவில்லை

**80)** பல்வேறு தொழில்கள் குறித்த நாட்டுப்புறப் பாடல்களை 'மலை அருவி' என்னும் நூலாகத் தொகுத்தவர்?

A) ஆறு.இராமநாதன்

B) நா.வானமாமலை

C) கி.வா. ஜகந்நாதன்

D) சக்திவேல்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**81)** பொருத்துக.

1. தண்பொருநை - அ) பொன் நாணயங்கள் உருவாக்கும் இடம்
2. அக்கசாலை - ஆ) குற்றாலம்
3. கொற்கை - இ) தாமிரபரணி
4. திரிகூடமலை - ஈ) முத்துக்குளித்தல்

A) 1-அ, 2-ஈ, 3-ஆ, 4-இ B) 1-அ, 2-ஈ, 3-இ, 4-ஆ
C) 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-அ D) 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ
E) விடை தெரியவில்லை

**82)** திருநெல்வேலியில் தாமிரபரணி நதியும் சிற்றாறும் கலக்கின்ற இடத்தின் பெயர் என்ன?

A) கொற்கை B) சீவலப்பேரி C) காயல் பட்டிணம் D) ஸ்ரீவைகுண்டம்
E) விடை தெரியவில்லை

**83)** இதய ஒலி என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) கி.ராஜநாராயணன் B) கு.அழகிரிசாமி
C) கு.ப.ராஜகோபாலன் D) டி.கே.சிதம்பரநாதர்
E) விடை தெரியவில்லை

**84)** பின்வருவனவற்றுள் குமரகுருபரரால் இயற்றப்படாத நூல் யாது?

A) கந்தர் கலிவெண்பா
B) கயிலைக்கலம்பகம்
C) சகலகலாவல்லி மாலை
D) நந்திக்கலம்பகம்
E) விடை தெரியவில்லை

**85)** திரு.வி.க அவர்கள் கூறியவற்றைக் கருத்தில் கொண்டு பொருத்துக

1. இயற்கை ஓவியம் - அ) கம்பராமாயணம்
2. இயற்கை இன்பக்கலம் - ஆ) பத்துப்பாட்டு
3. இயற்கை வாழ்வில்லம் - இ) கலித்தொகை
4. இயற்கைத் தவம் - ஈ) திருக்குறள்
5. இயற்கைப் பரிணாமம் - உ) சிந்தாமணி

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-உ, 5-அ B) 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-உ, 5-இ
C) 1-ஆ, 2-உ, 3-ஈ, 4-இ, 5-அ D) 1-ஆ, 2-ஈ, 3-உ, 4-இ, 5-அ
E) விடை தெரியவில்லை



ETW ACADEMY

**86)** "நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப் / பாணன் சூடான் பாடினி அணியாள்" என்னும் பாடல் இடம்பெற்ற இலக்கியம் எது?

A) பரிபாடல்

B) பதிற்றுப்பத்து

C) புறநானூறு

D) மதுரைக்காஞ்சி

E) விடை தெரியவில்லை

**87)** 'கலைஉணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம்' என்னும் இலக்கியம் எது?

A) புறநானூறு

B) அகநானூறு

C) நற்றிணை நானூறு

D) ஐங்குறுநூறு

E) விடை தெரியவில்லை

**88)** எவ்வாறான சொற்களைத் தேர்ந்தெடுத்து பேசவேண்டும் என்கிறார் திருவள்ளுவர்?

A) கேட்பவருக்குப் புரியும்படியான சொற்களை

B) யாருக்கும் தெரியாத சொற்களை

C) யாருக்கும் பொருள் புரியா சொற்களை

D) யாராலும் வெல்ல முடியாத சொற்களை

E) விடை தெரியவில்லை

**89)** கொங்கு மண்டலச் சதகம் என்ற நூலை எழுதியவர் யார்?

A) கார்மேகக் கவிஞர்

B) புலவர் குழந்தை

C) நாமக்கல் கவிஞர்

D) தேனரசன்

E) விடை தெரியவில்லை

**90)** சீரங்கராயன் சிவக்குமார் இயற்றாத நூல் எது?

A) கன்னிவாடி

B) குணச்சித்திரங்கள்

C) உப்புக்கடலைக் குடிக்கும் பூனைகள்

D) ஆழி சூழ் உலகு

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**91)** சிவபெருமானை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாக பாடப்பட்ட திருவெம்பாவை என்ற நூலை இயற்றியவர் யார்?

A) திருஞானசம்பந்தர்

B) திருநாவுக்கரசர்

C) சுந்தரர்

D) மாணிக்கவாசகர்

E) விடை தெரியவில்லை

**92)** அழுக்காறு என்ற சொல்லின் பொருள் என்ன?

A) பொய்மை

B) பொறாமை

C) பொறுமை

D) சோர்வு

E) விடை தெரியவில்லை

**93)** காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக் / காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! - என்னும் கவிதை வரிகள் யாருடையவை?

A) இரா.பி.சேது

B) மு. மேத்தா

C) ஈரோடு தமிழன்பன்

D) நா. பார்த்தசாரதி

E) விடை தெரியவில்லை

**94)** அண்மையில் கண்டறியப்பட்ட திராவிட மொழிகளில் சேராதது எது?

A) எருகலா

B) தங்கா

C) குடகு

D) சோழிகா

E) விடை தெரியவில்லை

**95)** தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகையை எவ்வாறு அழைப்பர்?

A) அந்தாதி B) சிந்து C) கண்ணி D) கலம்பகம்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**96)** தூது இயற்றப்படும் பா வகை யாது?

A) வெண்பா

B) ஆசிரியப்பா

C) கலி வெண்பா

D) வஞ்சிப்பா

E) விடை தெரியவில்லை

**97)** தமிழ்விடு தூதின் பாட்டுடைத்தலைவன் யார்?

A) தில்லை நடராசர்

B) தஞ்சை பெருவுடையார்

C) திருவண்ணாமலை அண்ணாமலையார்

D) மதுரை சொக்கநாதர்

E) விடை தெரியவில்லை

**98)** பாவின் சுவைகளில் ஒன்றாக இளிவரல் என்ற துன்பச் சுவையினைத் தமிழிலக்கணங்கள் சுட்டுகின்றன. துன்பச் சுவையுடைய பாடல்கள் இளிகியா (ελεγεία) என எந்த மொழியில் அழைக்கப்படுகின்றன?

A) கிரேக்கம்

B) லத்தீன்

C) ஆங்கிலம்

D) பிரெஞ்சு

E) விடை தெரியவில்லை

**99)** கீழ்க்காண்பவற்றில் எந்த துணைவினை செயப்பாட்டு வினையாக அமைகிறது?

A) படு

B) உண்

C) பெறு

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

**100)** அப்துல் நேற்று வந்தான் என்பது எந்த தொடரைக் குறிக்கும்?

A) தன்வினைத் தொடர்

B) பிறவினைத் தொடர்

C) செய்வினைத் தொடர்

D) செயப்பாட்டுவினைத் தொடர்

E) விடை தெரியவில்லை

**101)** இந்திய அரசியலமைப்பின் மகாசாசனம் என்று அழைக்கப்படுவது?

A) அரசியலமைப்பு உறுப்பு 32

B) அரசியலமைப்பின் பகுதி 3

C) அரசியலமைப்பு உறுப்பு 356

D) அரசியமைப்பு உறுப்பு 21

E) விடை தெரியவில்லை

**102)** பொருத்துக:

(i) சுதந்திர உரிமை - 1. பிரிவு 29 மற்றும் 30

(ii) சமத்துவ உரிமை - 2. பிரிவு 25 முதல் 28 வரை

(iii) சமயசார்பு உரிமை - 3. பிரிவு 14 முதல் 18 வரை

(iv) கல்வி & கலாச்சார உரிமை - 4. பிரிவு 19 முதல் 22 வரை

A) 1 2 3 4 B) 4 3 2 1 C) 4 3 1 2 D) 2 3 4 1

E) விடை தெரியவில்லை

**103)** இந்தியக் குடியுரிமை சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?

A) 1950

B) 1957

C) 1962

D) 1955

E) விடை தெரியவில்லை

**104)** இந்திய அரசியலமைப்பின் எந்த உறுப்பு திருத்தப்பட்டு, தொடக்கக்கல்வியானது பிரிவு 21-A வில் அடிப்படை உரிமையாக சேர்க்கப்பட்டுள்ளது?

A) 45 வது

B) 86 வது

C) 42 வது

D) 48 வது

E) விடை தெரியவில்லை

**105)** மத்திய-மாநில அரசுகளின் உறவினை விசாரிக்க மறைந்த முன்னாள் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்களால் அமைக்கப்பட்ட குழு எது?

A) பி.வி.ராஜமன்னார் குழு

B) சர்க்காரியா குழு

C) வேங்கட செல்லையா குழு

D) எம்.எம். பூஞ்சி குழு

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**106)** பொருத்துக:

| | | |
|---|---|---|
| (i) பிரிட்டன் | - | 1. நெறிமுறை கோட்பாடுகள் |
| (ii) அயர்லாந்து | - | 2. மாநிலங்களவை உறுப்பினர் தேர்வு |
| (iii) அமெரிக்கா | - | 3. ஒற்றைக் குடியுரிமை |
| (iv) பிரான்ஸ் | - | 4. குடியரசுத்தலைவர் பதவிநீக்க தீர்மானம் |
| (v) தென் ஆப்பிரிக்கா | - | 5. குடியரசு |

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 5 | 2 |
| B) | 2 | 1 | 4 | 5 | 3 |
| C) | 4 | 1 | 3 | 5 | 2 |
| D) | 3 | 1 | 4 | 2 | 5 |

E) விடை தெரியவில்லை

**107)** இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் தேர்தலில் வாக்குசெலுத்துபவர்களில் சேராதவர்கள் யார்?

A) மக்களவை உறுப்பினர்கள்

B) மாநிலங்களவை உறுப்பினர்கள்

C) மாநில சட்டமன்ற உறுப்பினர்கள்

D) எவருமில்லை

E) விடை தெரியவில்லை

**108)** குடியரசுத்தலைவருக்கு பதவிப்பிரமாணம் செய்துவைப்பவர் யார்?

A) பிரதமர்
B) மக்களவை சபாநாயகர்
C) மாநிலங்களவைத் தலைவர்
D) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி
E) விடை தெரியவில்லை

**109)** டாக்டர் சச்சிதானந்த சின்ஹா தலைமையில் அரசியல் நிர்ணயசபையின் முதல் கூட்டம் நடைபெற்றது

A) 1946 டிசம்பர் 9
B) 1947, ஆகஸ்ட் 29
C) 1947, ஜனவரி 22
D) 1946, ஆகஸ்ட் 29
E) விடை தெரியவில்லை

**110)** ஈரவைகளிலும் நிறைவேற்றப்பட்ட ஒரு முன்வரைவை மறுபரிசீலனைக்காக குடியரசுத்தலைவர் எத்தனை முறை திருப்பி அனுப்பலாம்?

A) ஒரு முறை

B) இரண்டு முறை

C) மூன்று முறை

D) எத்தனை முறை வேண்டுமானாலும்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**111)** துளசிதாசர் ____ வழிபாட்டில் ஒரு மிகச்சிறந்த துறவியாவார்.

A) காளி

B) இராம

C) சிவ

D) காணபத்ய

E) விடை தெரியவில்லை

**112)** ஹரப்பா அமைந்துள்ள மாண்ட்கோமரி மாவட்டம் தற்போது எங்குள்ளது?

A) துருக்கி

B) பாகிஸ்தான்

C) இந்தியா

D) ஈரான்

E) விடை தெரியவில்லை

**113)** பொருத்துக:

(i) ஹரிசேனர் - 1) கட்டடக் கலை நிபுணர்

(ii) அமர சிம்ஹர் - 2) சமஸ்கிருதப் புலவர்

(iii) காகபானகர் - 3) அகராதியியல் ஆசிரியர்

(iv) விட்டல்பட்டர் - 4) சோதிடர்

(v) சன்கு - 5) மாயவித்தைக்காரர்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 5 | 4 | 3 | 2 | 1 |
| C) | 4 | 5 | 2 | 3 | 1 |
| D) | 1 | 2 | 3 | 4 | 5 |

E) விடை தெரியவில்லை

**114)** ஹம்சா நாமா - என்ற ஓவிய நூலில் எத்தனை ஓவியங்கள் இருந்தன?

A) 452

B) 800

C) 2500

D) 1200

E) விடை தெரியவில்லை

**115)** தீன் இலாஹி என்ற புதிய மதத்தை அக்பர் அறிவித்த ஆண்டு?

A) 1582 B) 1569 C) 1597 D) 1665

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**116)** சிவாஜி, தனக்கு உதவுவதற்காக வைத்திருந்த ஆலோசனை சபையின் பெயர் என்ன?

A) நவபிரதான்

B) அஷ்டபிரதான்

C) தசபிரதான்

D) பிரதான்சபா

E) விடை தெரியவில்லை

**117)** ஈழமண்டலம் எனப்படும் இலங்கை முழுவதையும் கைப்பற்றியவர் யார்?

A) முதலாம் பராந்தகன்

B) விஜயாலயன்

C) இராஜராஜ சோழன்

D) முதலாம் இராஜேந்திரன்

E) விடை தெரியவில்லை

**118)** பாண்டியர் அரசுச் செயலகம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) ஆட்சி மண்டபம் B) சொல் மண்டபம் C) உருத்திர மண்டபம் D) எழுத்து மண்டபம்

E) விடை தெரியவில்லை

**119)** சிப்பாய் கலகம் நடைபெற்ற இடங்களையும், இந்தியத் தலைவர்களையும் பொருத்துக:

(i) லக்னோ - 1. கன்வர் சிங்

(ii) கான்பூர் - 2. கான் பகதூர் கான்

(iii) குவாலியர் - 3. பேகம் ஹஸ்ரத் மகால்

(iv) பரெய்லி - 4. நானா சாகிப்

(v) பீகார் - 5. தாந்தியா தோபே

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 5 | 1 |
| B) | 2 | 3 | 4 | 5 | 1 |
| C) | 2 | 4 | 5 | 3 | 1 |
| D) | 3 | 4 | 5 | 2 | 1 |

E) விடை தெரியவில்லை

**120)** மோதிலால் நேருவும், சி.ஆர். தாசும் சுயராஜ்ஜியக் கட்சியை தொடங்கிய நாள்?

A) 1922 ஜனவரி 31

B) 1923 ஜனவரி 31

C) 1922 ஜனவரி 1

D) 1923 ஜனவரி 1

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**121)** இந்து முஸ்லீம் ஒற்றுமையின் தூதுவர் என்று முகமது அலி ஜின்னாவை புகழ்ந்து கூறியவர்?

A) அருணா ஆசப் அலி

B) உஷா மேத்தா

C) ருக்மணி தேவி அருண்டேல்

D) சரோஜினி அம்மையார்

E) விடை தெரியவில்லை

**122)** 1906இல் டாக்கா அனுசீலன் சமிதி யாருடைய முயற்சியினால் உருவாகியது?

A) பரீந்தர்குமார் கோஷ்

B) ஜதிந்திரநாத் பானர்ஜி

C) பிகாரி தாஸ்

D) அரவிந்தகோஷ்

E) விடை தெரியவில்லை

**123)** 1889இல் அகமதியா இயக்கத்தை தோற்றுவித்தவர் யார்?

A) மிர்சா குலாம் அகமது

B) சயது அகமது கான்

C) முகமது காசிம் நாநோதவி

D) ரஷித் அகமத் கங்கோரி

E) விடை தெரியவில்லை

**124)** கிரிப்ஸ் முன்மொழிவு வரைவைப் பற்றி "நான் முதன்முறையாக இவ்வரைவை வாசித்த போது, கடுமையான மன அழுத்தத்திற்கு உட்பட்டேன்" எனக் குறிப்பிட்டவர் யார்?

A) மகாத்மா காந்தி

B) ஜெவகர்லால் நேரு

C) சர்தார் வல்லபாய் பட்டேல்

D) சத்தியமூர்த்தி

E) விடை தெரியவில்லை

**125)** சுந்தரவனப்பகுதியில் சூரிய ஒளியைப் பயன்படுத்தி, மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் தோன்றுவதற்கு முக்கிய பங்கு வகித்த இயக்கம்?

A) தியோபந்த் இயக்கம்

B) ரக்னுமய் மத்யஸ்தன் சபா

C) இராமகிருஷ்ண இயக்கம்

D) அலிகார் இயக்கம்

E) விடை தெரியவில்லை

**126)** சுதந்திர இந்தியாவின் பொருளாதாரக் கொள்கை பற்றிய ஒரு பார்வையை வழங்கிய காங்கிரஸ் அமர்வு?

A) 1931 கராச்சி அமர்வு

B) 1929 லாகூர் அமர்வு

C) 1908 மதராஸ் அமர்வு

D) 1942 பம்பாய் அமர்வு

E) விடை தெரியவில்லை

**127)** 1920 டிசம்பர் மாதம் யார் தலைமையில் நாக்பூரில் நடந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது?

A) ஈரோடு வெ. ராமசாமி

B) சேலம் சி. விஜயராகவாச்சாரியார்

C) திருச்சி ஆர். சோமசுந்தரம்

D) மதுரை வைத்தியநாதன்

E) விடை தெரியவில்லை

**128)** வங்காளத்திலும் இந்தியாவின் கிழக்குப் பகுதிகளிலும் தொடங்கப்பட்ட பிராமணரல்லாதோர் இயக்கம் எது?

A) நாமசூத்ரா இயக்கம்

B) ஆதிதர்மா இயக்கம்

C) சத்யசோதக் இயக்கம்

D) திராவிட இயக்கம்

E) விடை தெரியவில்லை

**129)** தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டம் (NREP) தொடங்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1979 B) 1980 C) 1983 D) 1986

E) விடை தெரியவில்லை

**130)** எம்.விஸ்வேஸ்வரய்யா, "இந்தியாவுக்கான திட்டமிட்ட பொருளாதாரம்" என்னும் புத்தகத்தில் இந்தியாவுக்கான எத்தனை ஆண்டு திட்டம் ஒன்றினை முன்மொழிந்திருந்தார்?

A) 5 ஆண்டு திட்டம்

B) 10 ஆண்டு திட்டம்

C) 3 ஆண்டு திட்டம்

D) 8 ஆண்டு திட்டம்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**131)** இந்தியப் பிரதமரால், புதிய தொழிற்கொள்கை அறிவிக்கப்பட்ட நாள்?

A) ஏப்ரல் 1, 1991

B) ஜனவரி 1, 1991

C) மே 1, 1991

D) ஜுலை 24, 1991

E) விடை தெரியவில்லை

**132)** இரயத்துவாரி முறை அல்லது சொந்த சாகுபடி முறை முதன் முதலில் எந்த மாநிலத்தில் அறிமுகம் செய்யப்பட்டது?

A) ஆந்திரா

B) தமிழ்நாடு

C) மகாராஷ்டிரம்

D) பஞ்சாப்

E) விடை தெரியவில்லை

**133)** பின்வரும் வாக்கியங்களில் தவறானது எது?

A) உலகின் புவிப்பரப்பில் இந்தியா 2.4 சதவீத பரப்பைக் கொண்டுள்ளது

B) உலக வருவாயில் இந்தியா 1.2% வருவாயைப் பெற்றுள்ளது

C) உலக மக்கள் தொகையில் இந்தியா 16.5 சதவீதத்தைக் கொண்டுள்ளது

D) ஏதுமில்லை

E) விடை தெரியவில்லை

**134)** இந்தியாவில் அனைத்து நுகர்வோரும் செலுத்தும் வரி எது?

A) நேர்முக வரி

B) மறைமுக வரி

C) சொத்து வரி

D) வருமான வரி

E) விடை தெரியவில்லை

**135)** விழு மூடிக்கொள் பிடித்துக்கொள் என்பது பின்வரும் எந்த பேரிடரில் இருந்து தற்காத்துக்கொள்ளும் வழிமுறையாகும்?

A) நிலநடுக்கம்

B) நிலச்சரிவு

C) மின்னல்

D) வெள்ளம்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**136)** இந்தியாவில் காணப்படும் இரும்புத்தாது வளங்களில் அதிகமாகக் கிடைக்கும் வகை எது?

A) மேக்னடைட்

B) ஹேமடைட்

C) லிமோனைட்

D) கோதைட்

E) விடை தெரியவில்லை

**137)** இந்தியாவின் முதல் காகிதத் தொழிற்சாலை எம்மாநிலத்தில் தொடங்கப்பட்டது?

A) கர்நாடகா

B) கேரளா

C) மேற்கு வங்கம்

D) பீகார்

E) விடை தெரியவில்லை

**138)** இந்தியாவில் மிக அதிக மக்கள்டர்த்தியைக் கொண்ட (1106 பேர்/ச.கி.மீ) மாநிலம் எது?

A) மேற்கு வங்கம்

B) மகாராஷ்டிரா

C) உத்திரபிரதேசம்

D) பீகார்

E) விடை தெரியவில்லை

**139)** இந்திய மக்களியல் வரலாற்றில் 'பெரும் மக்களியல் பிளவு ஆண்டு' என அழைக்கப்படும் ஆண்டு எது?

A) 1911

B) 1971

C) 1921

D) 1951

E) விடை தெரியவில்லை

**140)** தன்னுடைய பேரரசை பலப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் சாஹி (ராயல்) சாலையை சிந்து பள்ளத்தாக்கிலிருந்து மேற்கு வங்கத்தில் உள்ள சோனார் பள்ளத்தாக்கு வரை அமைத்தவர் யார்?

A) அக்பர்

B) இல்துமிஷ்

C) ஷெர்ஷா சூரி

D) இரண்டாம் சமுத்திரகுப்தர்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**141)** பின்வரும் எது பின்னாளில் நீதிக்கட்சியாக மாறியது?

A) சென்னை மகாஜன சங்கம்
B) சென்னை வாசிகள் சங்கம்
C) தென்னிந்திய நல உரிமை சங்கம்
D) திராவிடர் கழகம்
E) விடை தெரியவில்லை

**142)** சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரப்பூர்வ இதழ் எது?

A) உண்மை
B) குடிஅரசு
C) திராவிட நாடு
D) மேற்கண்ட அனைத்தும்
E) விடை தெரியவில்லை

**143)** கூற்று: மூவலூர் இராமாமிருதம் அம்மையார் ஆதரவற்றோருக்கான அவ்வை இல்லத்தை நிறுவினார்

காரணம்: அவர் பெரியாரின் சீடர்

A) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை உறுதிப்படுத்துகிறது
B) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றுக்கு பொருந்தவில்லை
C) கூற்று சரி காரணம் தவறு
D) கூற்று தவறு; காரணம் சரி
E) விடை தெரியவில்லை

**144)** சுயமரியாதைத் திருமணத்தோடு தொடர்பில்லாத சொற்றொடர் எது?

A) பிராமண புரோகிதர் இல்லாது நடத்தப்பட்டது
B) எந்த மதச்சாபு வழக்கங்களும் பின்பற்றப்படுவதில்லை
C) அரசுப் பதிவாளர் முன்னிலையில் நடைபெற்றது
D) மணமக்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்வர்
E) விடை தெரியவில்லை

**145)** _______ _______ _______ இவைமூன்றன்

நாமம் கெடக்கெடும் நோய்.

மேற்காணும் திருக்குறளில் எம்மூன்றும் கெட நோய் கெடும் என்கிறார் வள்ளுவர்?

A) காமம், வெகுளி, மயக்கம்
B) அழுக்காறு, அவா, வெகுளி
C) மயக்கம், அவா, வெகுளி
D) மயக்கம், அவா, காமம்
E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**146)** பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் உடல்நலனை மேம்படுத்த பள்ளிகளில் இளம்பருவ மருத்துவமனைகளை செயல்படுத்திவரும் தமிழ்நாடு மாநில அரசின் திட்டம்?

A) நலமான தமிழகம்

B) வாழ்வொளித் திட்டம்

C) புதுவாழ்வுத் திட்டம்

D) குடும்பநலத் திட்டம்

E) விடை தெரியவில்லை

**147)** பொருந்தாதது எது?

A) வரதட்சணை தடுப்பு சட்டம் – 1956

B) குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் - 2005

C) பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் சட்டம் - 2013

D) குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் விதிகள் - 2006

E) விடை தெரியவில்லை

**148)** நிதி ஆயோக் இன் 2020 21 அறிக்கையின்படி, வறுமை இல்லாத மாநிலங்களின் பட்டியலில் முதலிடம் வகிக்கும் மாநிலம் எது?

A) கேரளா

B) மகாராஷ்டிரா

C) உத்திரப் பிரதேசம்

D) தமிழ்நாடு

E) விடை தெரியவில்லை

**149)** பெண் குழந்தைகளுக்கான முன்னோடி மற்றும் வழிகாட்டும் திட்டமாக முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு?

A) 1990

B) 1992

C) 1994

D) 2004

E) விடை தெரியவில்லை

**150)** நீதிக்கட்சியால் முதல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை வெளியிடப்பட்ட ஆண்டு என்ன?

A) 1920, செப்டம்பர் 20

B) 1921 செப்டம்பர் 16

C) 1921 ஆகஸ்ட் 16

D) 1922 ஆகஸ்ட் 15

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**151)** அண்ணா அறிமுகப்படுத்திய சுயமரியாதைத் திருமணப் பாதுகாப்புச் சட்டம் என்று முதல் நடைமுறைக்கு வந்தது?

A) 1968, ஜனவரி 6

B) 1968 ஜனவரி 14

C) 1968 ஜனவரி 26

D) 1968 ஜனவரி 20

E) விடை தெரியவில்லை

**152)** பெரியார் திராவிட நாடு மாநாட்டைக் கூட்டிய ஆண்டு?

A) 1937

B) 1938

C) 1939

D) 1940

E) விடை தெரியவில்லை

**153)** ஒவ்வொரு மாவட்டத்திலும் 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பிடித்து தமிழ்நாட்டில் உள்ள தொழில் முறை கல்லூரிகளில் பயிலும் BC/MBC/DNC மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் விருது?

A) அண்ணல் காந்தி நினைவு விருது

B) பேரறிஞர் அண்ணா நினைவு விருது

C) முத்துலட்சுமி அம்மையார் நினைவு விருது

D) தந்தை பெரியார் நினைவு விருது

E) விடை தெரியவில்லை

**154)** தமிழ்நாடு சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO) துவங்கப்பட்ட ஆண்டு?

A) 1960

B) 1965

C) 1970

D) 1975

E) விடை தெரியவில்லை

**155)** தமிழக அரசர்களின் கூட்டணி பற்றி குறிப்பிடும் கல்வெட்டு?

A) உருத்திரமேரூர் கல்வெட்டு

B) ஹதிகும்பா கல்வெட்டு

C) அசோகரின் பாறைத்தூண் கல்வெட்டு

D) திருமுக்கூடல் கல்வெட்டு

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**156)** ஒடுக்கப்பட்டோரின் கோவில்நுழைவுக்கு ஆதரவாகக் குரல் எழுப்புவதற்காகப் பண்டிதர் அயோத்திதாசர் நிறுவிய அமைப்பு எது?

A) திராவிட விடுதலைக் கழகம்

B) திராவிடர்க் கழகம்

C) அத்வைதானந்தா சபா

D) திராவிட மகாஜனசபை

E) விடை தெரியவில்லை

**157)** தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரிகளையும் ஒருங்கிணைத்து தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1979

B) 1982

C) 1989

D) 1991

E) விடை தெரியவில்லை

**158)** அண்ணாவால் துவங்கப்பட்டு, அவரே ஆசிரியராக பணியாற்றிய ஆங்கில வார இதழ் எது?

A) ஹோம் ரூல்

B) ரிவோல்ட்

C) ஹோம் லேண்ட்

D) யங் இந்தியா

E) விடை தெரியவில்லை

**159)** தொல் உயிர்ப் படிவங்களின் காலத்தை அறிய உதவும் சிறந்த முறை.

A) ரேடியோ கார்பன் முறை

B) யுரேனியம் காரீய முறை

C) பொட்டாசியம் ஆர்கான் முறை

D) A & C

E) விடை தெரியவில்லை

**160)** பரிணாமத்தின் இயற்கைத் தேர்வு கோட்பாட்டை முன்மொழிந்தவர்

A) சார்லஸ் டார்வின்

B) எர்னஸ்ட் ஹெக்கல்

C) ஜீன் பாப்டிஸ்ட் லாமார்க்

D) கிரிகர் மெண்டல்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**161)** தமிழ்நாட்டிற்கென தனியே ஒரு கல்விக் கொள்கையினை வகுப்பதற்கு யார் தலைமையில் ஒரு குழு அமைகப்பட்டுள்ளது?

A) முருகேசன்

B) கோவர்தன்

C) பழனிச்சாமி

D) குமாரசாமி

E) விடை தெரியவில்லை

**162)** சமீபத்தைய உலக அமைதி மாநாடு நடைபெற்ற இடம்?

A) நியூயார்க்

B) ஜெனிவா

C) கலி∴போனியா

D) லாஸ் ஏஞ்செல்ஸ்

E) விடை தெரியவில்லை

**163)** செபியின் முதல் பெண் தலைவர்?

A) மாதவி புரி புக்

B) செவ்லி மத்தே

C) தீபிகா கவுர்

D) ஸ்மிரிதி பட்டேல்

E) விடை தெரியவில்லை

**164)** விழி ஏற்பமைவுத் திறன் குறைபாட்டைச் சரி செய்ய உதவுவது

A) குவி லென்சு

B) குழி லென்சு

C) குவி ஆடி

D) இரு குவிய லென்சு

E) விடை தெரியவில்லை

**165)** புவியில் M நிறை கொண்ட பொருள் ஒன்று புவியின் ஆரத்தில் பாதி அளவு ஆரம் கொண்ட கோள் ஒன்றிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு அதன் நிறை மதிப்பு.

A) 4M

B) 2M

C) M/4

D) M

E) விடை தெரியவில்லை

**166)** ஒரு தனிமத்தின் வேறு வடிவங்கள்

A) புறவேற்றுமை வடிவங்கள்

B) மாற்றியங்கள்:

C) இணைதிறன்கள்

D) கார்பன் சேர்மங்கள்

E) விடை தெரியவில்லை

**167)** பிவிசி - யின் ரெசின் குறியீடு?

A) 2
B) 3
C) 4
D) 6
E) விடை தெரியவில்லை

**168)** உலகலாவிய கரைப்பான் என அழைக்கப்படுவது?

A) அசிட்டோன்

B) பென்சீன்

C) நீர்

D) ஆல்கஹால்

E) விடை தெரியவில்லை

**169)** மழைநீரின் pH மதிப்பு _____ க்கு கீழ் செல்லும்போது அது அமில மழை எனப்படும்.

A) 5.6
B) 7.8
C) 6.4
D) 3.2
E) விடை தெரியவில்லை

**170)** கரிமச் சேர்மங்கள் பொதுவாக பின்வரும் எதில் கரையாது?

A) ஈதர்

B) கார்பன் டெட்ராகுளோரைடு

C) டொலுவின்

D) நீர்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**171)** சலவை இயந்திரங்களில் அரிப்பு ஏற்படாமல் பாதுகாக்க டிடர்ஜெண்டுகளில் சேர்க்கப்படுவது?

A) சோடியம் பெர்போரேட்

B) சோடியம் சல்பேட்

C) என்சைம்ஸ்

D) சோடியம் சிலிக்கேட்

E) விடை தெரியவில்லை

**172)** கடலில் காற்றாலை மின் நிலையம் அமைக்கும் தொழில்நுட்பம் குறித்து ஆய்வு செயும் மையம் எங்கு அமைக்கப்பட உள்ளது?

A) நாகர்கோயில்

B) கன்னியாகுமரி

C) இராமேஸ்வரம்

D) தனுஷ்கோடி

E) விடை தெரியவில்லை

**173)** 56-வது ஞானபீட விருதுபெற்ற நீலமணி பூக்கன் எம்மாநிலத்தைச் சேர்ந்தவர்?

A) கேரளா

B) மகாராஷ்டிரா

C) ஒடிசா

D) அஸாம்

E) விடை தெரியவில்லை

**174)** யாருடைய பிறந்தநாள் சமத்துவ நாளாக தமிழகத்தில் கொண்டாடப்படுகிறது?

A) பெரியார்

B) அயோத்திதாசர்

C) காமராசர்

D) அம்பேத்கர்

E) விடை தெரியவில்லை

**175)** 2022 இல் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் உலகக்கோப்பை கால்பந்து போட்டியை நடத்தவிருக்கும் நாடு?

A) கியூபா

B) பொலிவியா

C) வியட்நாம்

D) இந்தியா

E) விடை தெரியவில்லை

**176)** ரூபாய் 1600 ஆனது 5% ஆண்டு கூட்டு வட்டி வீதம் கொண்டு எத்தனை ஆண்டுகளில் ரூபாய்1852.20 ஆகும்?

A) 2 ஆண்டுகள்

B) 5 ஆண்டுகள்

C) 4 ஆண்டுகள்

D) 3 ஆண்டுகள்

E) விடை தெரியவில்லை

**177)** அடுத்த எழுத்தை கண்டறிக?

R, U, X, A, D,_________

A) E

B) H

C) G

D) F

E) விடை தெரியவில்லை

**178)** A என்பவர் ஒரு வேலையை 12 மணி நேரத்தில் முடிப்பார். B மற்றும் C அந்த வேலையை 3 மணி நேரத்திலும் A மற்றும் C அந்த வேலையை 6 மணி நேரத்திலும் செய்து முடிப்பர். அதே வேலையை B தனியே எவ்வளவு மணி நேரத்தில் முடிப்பார்?

A) 2 மணிகள்

B) 5 மணிகள்

C) 7 மணிகள்

D) 4 மணிகள்

E) விடை தெரியவில்லை

**179)** ரூபாய் 15625- ஐ 6 மாதங்களுக்கு 16% ஆண்டு வட்டி வீதத்தில் முதலீடு செய்தால், வட்டி காலாண்டுக்கு ஒரு முறை சேர்க்கப்பட்டால், கூட்டு வட்டியை காண்க?

A) ரூபாய் 1300

B) ரூபாய் 1325

C) ரூபாய் 1250

D) ரூபாய் 1275

E) விடை தெரியவில்லை

**180)** 12 மாடுகள் ஒரு வயலை 10 நாட்களில் மேய்கிறது எனில் 20 மாடுகள் அதே வயலை எத்தனை நாட்களில் மேயும்?

A) 15

B) 18

C) 6

D) 8

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**181)** மீ. பொ.வ காண்க: $x^2+xy$, $x3\ y^2 + x^2\ y3$

A) x(x+y)

B) $x^2+ xy$

C) $x3\ y^2 + x^2\ y3$

D) xy (x+y)

E) விடை தெரியவில்லை

**182)** ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ரூபாய் 4500 அசலுக்கு மொத்த தொகை ரூபாய் 5000 கிடைத்தால் அதனுடைய தனிவட்டி எவ்வளவு?

A) ரூ.500

B) ரூ.200

C) 20%

D) 15%

E) விடை தெரியவில்லை

**183)** 3,6,9,.... 111 என்ற தொடர் வரிசையில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை என்ன?

A) 37

B) 38

C) 36

D) 42

E) விடை தெரியவில்லை

**184)** A ஆனவர் ஆண்டொன்றுக்கு 14% வட்டி வீதத்தில் B-க்கு 15000 கடனாக கொடுக்கிறார். 6 ஆண்டுகளுக்குப் பின் B- ஆனவர் A க்கு 25000-ம் ஒரு கை கடிகாரமும் தருகிறார் எனில் கைக்கடிகாரத்தின் விலை என்ன?

A) 2600

B) 1980

C) 1850

D) 1760

E) விடை தெரியவில்லை

**185)** ஓர் அலுவலக கட்டட தரையில் 200 சாய்சதுர வடிவிலான ஓடுகள் பதிக்கப்படுகின்றன. ஓடுகளின் மூலைவிட்டங்களின் அளவுகள் 40 செ.மீ. மற்றும் 25 செ.மீ. எனில், தரையை மெருகூட்ட சதுர மீட்டருக்கு ரூ.45 வீதம் மொத்த செலவை காண்க?

A) ரூபாய் 900

B) ரூபாய் 200

C) ரூபாய் 4500

D) ரூபாய் 450

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**186)** எத்தனை ஆண்டுகளில் ரூபாய் 5600 ஆண்டுக்கு 6% தனிவட்டி வீதத்தில் ரூபாய் 6720 ஆக உயரும் ?

A) 2 1/3 ஆண்டுகள்

B) 2 2/3 ஆண்டுகள்

C) 3 2/3 ஆண்டுகள்

D) 3 1/3 ஆண்டுகள்

E) விடை தெரியவில்லை

**187)** 25 மாணவர்களில் 75% பேர் கணித பாடத்தில் திறமையானவர்கள். கணித பாடத்தில் திறமையற்றவர்கள் எத்தனை பேர்?

A) 5 மாணவர்கள்

B) 6 மாணவர்கள்

C) 7 மாணவர்கள்

D) 8 மாணவர்கள்

E) விடை தெரியவில்லை

**188)** 48 இன் 48% = x இன் 64% எனில் x ன் மதிப்பு_____ ஆகும்.

A) 64

B) 56

C) 42

D) 36

E) விடை தெரியவில்லை

**189)** "666 கிராமுக்கு 6 கிலோகிராம்" என்பதன் விகிதம் காண்க?

A) 111:1

B) 111:10

C) 111:100

D) 111:1000

E) விடை தெரியவில்லை

**190)** அடுத்த எண் யாது?

840, 168, 42, 14, 7,______

A) 7

B) 1

C) 0

D) -7

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**191)** A ஆனவர் B என்பவரை காட்டிலும் வேலை செய்வதில் 3 மடங்கு வேகமானவர். அவரால் அந்த வேலையை B எடுத்துக் கொண்ட நேரத்தை விட 24 நாட்கள் குறைவாக எடுத்து முடிக்க முடிகிறது. இருவரும் சேர்ந்து அந்த வேலையை முடிக்க ஆகும் நேரத்தை காண்க?

A) 4 நாட்கள்

B) 6 நாட்கள்

C) 9 நாட்கள்

D) 7 நாட்கள்

E) விடை தெரியவில்லை

**192)** ரூபாய் 8000 ஆனது மூன்று ஆண்டுகளில் கூட்டுத் தொகை ரூபாய் 9261 ஆகும். கூட்டு வட்டி வீதம் காண்க. (வட்டி ஆண்டிற்கு ஒரு முறை அசலுடன் சேருகின்றது)

A) 3%

B) 4%

C) 5%

D) 2%

E) விடை தெரியவில்லை

**193)** x : 4/9 = 3/11 : 5/33 எனில் x ன் மதிப்பு காண்க?

A) 3/7

B) 11/15

C) 4/5

D) 3/17

E) விடை தெரியவில்லை

**194)** $x^4 -1$, $x^2 -1$ -ன் மீ. பொ.வ காண்க:

A) (x+1)(x-1)

B) $(x-1)^2$

C) $x^2 +1$

D) $(x+1)^2$

E) விடை தெரியவில்லை

**195)** $x = (-1)^1 + (-1)^2 + (-1)^3 + (-1)^4 + \dots$ 25 உறுப்புகள்; $Y= (-1)^1 - (-1)^2 - (-1)^3 - (-1)^4 - \dots$ 25 உறுப்புகள் எனில் $x^2 + y^2$ என்பது

A) -625

B) +624

C) 626

D) -626

E) விடை தெரியவில்லை

**196)** ஓர் ஈரிலக்க எண்ணின் இலக்கங்களின் கூடுதல் 9. அந்த எண்ணுடன் 27-ஐ கூட்டும் போது இலக்கங்கள் இடம் மாறுகின்றன எனில் அந்த எண் எது?

A) 69 B) 36 C) 47 D) 63

E) விடை தெரியவில்லை

**197)** 63 செ.மீ² பரப்பளவுள்ள ஒரு நாற்கரத்தின் ஒரு மூலைவிட்டம் 7செ.மீ. மேலும் எதிர் உச்சங்களிலிருந்து அம்மூலைவிட்டத்திற்கு வரையப்படும் குத்து கோடுகளின் நீளங்கள் 5 செ.மீ. மற்றும் x செ.மீ. எனில் x-ன் மதிப்பு என்ன?

A) 9 செ.மீ. B) 23 செ.மீ. C) 35 செ.மீ. D) 13 செ.மீ.

E) விடை தெரியவில்லை

**198)** கடனாக வழங்கப்பட்ட அசல் ரூபாய் 48000 க்கு 2 ஆண்டுகள் 3 மாத காலத்திற்கு பின் தனி வட்டி மூலம் பெறப்பட்ட மொத்த தொகை ரூபாய் 55,560 ஆக இருந்தது எனில், வட்டி வீதத்தை காண்க?

A) 6% B) 7% C) 8% D) 9%

E) விடை தெரியவில்லை

**199)** ஒரு வகுப்பில் 50 மாணவர்கள் உள்ளனர். ஒரு குறிப்பிட்ட நாளில் 14% வருகை புரியவில்லை எனில் வருகை புரிந்த மாணவர்களின் எண்ணிக்கை காண்க ?

A) 36
B) 7
C) 43
D) 38
E) விடை தெரியவில்லை

**200)** இரு சார் பகா எண்களின் மீ.சீ.ம.5005. ஓர் எண் 65 எனில், மற்றோர் எண் என்ன?

A) 65
B) 66
C) 1
D) 77
E) விடை தெரியவில்லை

***

© ETW Academy